இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 12-07-2024

# பின்பற்றத் தகுந்த பிரிட்டன் மாற்றங்கள்

**பிரிட்டனில் மாபெரும் அரசியல் மாற்றம் நடந்துள்ளது. வரலாற்றில் இதுவரை இல்லாத தோல்வியை கன்சர்வேடிவ் கட்சி அடைந்துள்ளது. 14 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சியைப் பிடித்திருக்கிறது தொழிலாளர் கட்சி. உலகம் உன்னிப்பாகக் கவனிக்கும் அரசியல் மாற்றமாக இது அமைந்துள்ளது.**

தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த கியர் ஸ்டார்மர் புதிய பிரதமர் ஆகி இருக்கிறார். ரிஷி சுனக் தனது பிரதமர் பதவியை இழந்திருக்கிறார். 'இந்திய வம்சாவளி பிரதமர்' என அடையாளம் காட்டப்பட்ட ரிஷி சுனக்கின் தோல்வி கவனிக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

650 இடங்களில் தொழிலாளர் கட்சி 412 இடங்களைக் கைப்பற்றி மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. வெற்றி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற அளவுக்கு மகத்தான வெற்றி இது. 121 இடங்களை மட்டுமே பிடித்து மாபெரும் தோல்வியை அடைந்துள்ளது கன்சர்வேட்டிவ் கட்சி. லிபரல் டெமாக்ரடிக் கட்சியானது 71 இடங்களைக் கைப்பற்றி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. 4.6 கோடி பேர் வாக்களித்தார்கள். 'இன்னமும்' வாக்குச் சீட்டு முறையைத்தான் பிரிட்டன் பின்பற்றிக் கொண்டிருக்கிறது.

ஆட்சியில் இருந்த கன்சர்வேட்டிவ் கட்சியில் அமைச்சர்களாக இருந்த பலரும் படுதோல்வியைச் சந்தித்தார்கள். முன்னாள் பிரதமர் லிஸ் டிரஸும் தோல்வியை அடைந்துள்ளார். இந்தத் தோல்வியை ரிஷி சுனக் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளார். அதுதான் முக்கியமானது.

> **"இந்தத் தேர்தல் தோல்விக்காக அனைவரிடமும் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் கோபம், ஏமாற்றம் ஆகியவற்றை நான் அறிந்து கொண்டேன். இந்த இழப்புக்கு நான் பொறுப்பேற்கிறேன். இந்த முடிவுக்கு பொறுப்பேற்று கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் விலகுவேன்" என்பதை அறிவித்த பாங்கு அனைவரும் பின்பற்றத்தக்கது ஆகும்.**
>
> **புதிய பிரதமர் ஆகி இருக்கும் கியர், "இப்போது மாற்றம் வந்து விட்டது. நீங்கள் நாட்டை மாற்றிவிட்டீர்கள். கட்சித் தொண்டர்களின் உழைப்புக்குக் கிடைத்த வெற்றி இது" என்று சொல்லி இருக்கிறார். இதுவும் அனைவரும் பின்பற்றத்தக்கது ஆகும்.**

**தோல்வி அடைந்தவர் தன்னையே அதற்குக் காரணமாகச் சொல்லிக் கொள்வது, வெற்றி அடைந்தவர், அந்த வெற்றிக்கு கட்சித் தொண்டர்கள்தான் காரணம் என்று சொன்னதும் பிரிட்டன் நாடு உலகுக்குச் சொல்லும் செய்தியாகும்.**

தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த கியர் ஸ்டார்மர், இங்கிலாந்தின் பிரதமர் ஆகி இருப்பது அந்நாட்டு மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது. 14 ஆண்டுகளுக்குப் பிறகு தனது தொழிலாளர் கட்சியை வெற்றி பெற வைத்துள்ளார் கியர். 2020ஆம் ஆண்டுதான் தொழிலாளர் கட்சியின் தலைவராக கியர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2015 ஆம் ஆண்டு, இவர் தேர்தல் அரசியலுக்கு வந்தார். இரண்டு தொகுதிகளில் எம்.பி.யாக இருந்தார். கட்சியை வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்துடன் செயல்பட்டார். அதில் வெற்றியும் பெற்றார்.

> கியர், மிகச் சாதாரண தொழிலாளர் குடும்பத்தில் 1962 ஆம் ஆண்டு பிறந்தவர். செவிலியராக வேலை பார்த்தவர் அவரது தாய். தனது மகனை சட்டம் படிக்க வைத்தார் அந்தத் தாய். மனித உரிமைகளுக்காக வாதாடும் வழக்கறிஞராக கியர் செயல்பட்டார். மனதில் பட்டதை தைரியமாக வெளிப்படுத்துபவராக கியர் இருந்தார். டோனி பிளேயர் தனது ஆட்சிக் காலத்தில் ஈராக் மீது படையெடுத்த போது அதனை கியர் கடுமையாக எதிர்த்தார். அத்தகைய சிந்தனை கொண்ட கியர், இங்கிலாந்து பிரதமர் ஆகி இருப்பது இந்தக் காலக் கட்டத்தில் மிக முக்கியமானது ஆகும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞரின் கனவு இல்லத் திட்டம் - ஆகிய தமிழ்நாடு முதலமைச்சரின் மூன்று முத்தான திட்டங்கள் தொழிலாளர் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. அந்தக் கட்சி அடைந்துள்ள வெற்றிக்குப் பின்னால் உள்ள வெற்றிச் சூத்திரங்களில் ஒன்றாக இவையும் அமைந்துள்ளன என்பதும் நமக்குப் பெருமை அளிப்பது ஆகும்.

பிரிட்டன் தேர்தலில் மேலும் சில வரவேற்கத்தக்க செய்திகள் கிடைக்கின்றன. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 28 பேர், பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஆகி இருக்கிறார்கள். பதவி விலகி இருக்கும் இந்திய வம்சாவளி இனத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் ரிஷி சுனக்கும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 'எனது தாத்தா, பாட்டி ஆகியோர் இரண்டு தலைமுறைக்கு முன்னால் இங்கே வந்தார்கள். நானும் பிரதமர் ஆக முடியும் என்பதைக் காட்டி விட்டேன்' என்கிறார் சுனக்.

**தொழிலாளர் கட்சி, கன்சர்வேட்டிவ் கட்சி, லிபரல் டெமாக்ரட்டிக் கட்சி - ஆகிய மூன்று கட்சிகளில் இருந்தும் இந்திய வம்சாவளி இனத்தைச் சேர்ந்தவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகி இருக்கிறார்கள். இது பிரிட்டனின் பன்முகத் தன்மையையும், அந்நாட்டு மக்களின் பரந்த உள்ளத்தையும் காட்டுகிறது. உலகமானது 'அனைவர்க்கும் பொதுவானது' என்ற சிந்தனையை இது விதைத்துள்ளது. நாடுகளும், எல்லைகளும் 'அனைத்து மக்களுக்குமானது' என்பதன் அடையாளம் இவை. தூய்மைவாதத்தை துடைப்பவையாக இந்த முடிவுகள் அமைந்துள்ளன.**

இன்னொரு மகிழ்ச்சிக்குரிய செய்தி, ஈழத்தமிழினத்தைச் சேர்ந்த உமா குமரன், எம்.பி. ஆக ஆகி இருக்கிறார். பிரிட்டன் வரலாற்றில் முதல் தமிழ் எம்.பி.யாகத் தேர்வாகி இருக்கிறார். இலங்கையில் நடந்த போருக்குப் பின்னர், இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். இனவாதம் அவரது குடும்பத்தை இலங்கையை விட்டுத் துரத்தியது. இங்கிலாந்து அரவணைத்தது. யாரும் அகதிகள் அல்ல, **'யாவரும் கேளிர்' என்பதை உணர்த்துகிறது உமா குமரனின் வெற்றி.**

**"அரசியல் என்றால் பொதுசேவை மட்டும்தான்" என்று சொல்லி இருக்கிறார் பிரிட்டனின் புதிய பிரதமர் கியர். இதை மறுப்பார் உண்டோ?**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (11.7.2024) சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டி சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஏஎம்வி. பிரபாகர ராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ரூ.51 கோடியில் - அரூர் அரசு மருத்துவமனையின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்! முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

## தருமபுரி - வெண்ணம்பட்டி சாலையில் - ரூ 38 கோடியில் புதிய ரயில்வே மேம்பாலம் !

3 ஆயிரத்து 107 மனுக்கள் பெறப்பட்டு, 30 நாட்களில் 1,868 மனுக்களுக்கு சாதகமான முறையில் தீர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்தத் திட்டம் மக்களுக்குப் பயனளிக்கத் தொடங்கிய காரணத்தால்தான், இப்போது ஊரக ஊராட்சிகளுக்கும் விரிவு செய்திருக்கிறோம். அதைத் தொடங்கி வைக்கத் தான் நான் இங்கே வந்திருக்கிறேன்.

**வெற்றிக்கு நன்றியாக - நான் அறிவிக்கும் திட்டங்கள்!**

கடந்த முறை தேர்தல் பரப்புரைக்காக நான் வந்தேன். இப்போது, நீங்கள் கொடுத்த வெற்றிக்கு நன்றியாக உங்கள் மாவட்டத்திற்கான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

- **51 கோடி ரூபாய் செலவில் அரூர் அரசு மருத்துவமனையின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.**
- **கடந்த சட்டமன்றத்தேர்தல் பரப்புரையின்போது கொடுத்த வாக்குறுதியான தருமபுரி - வெண்ணம்பட்டி சாலையில், புதிய ரயில் மேம்பாலம் 38 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**
- **மோபிரிபட்டி-தொட்டம்பட்டியை இணைத்து, "அரூர் பேரூராட்சி", "அரூர் நகராட்சியாக" தரம் உயர்த்தப்படும்.**
- **பஞ்சப்பள்ளி, ராஜபாளையம் அணைக்கட்டுகள் 5 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.**
- **சிட்லிங், அரசநத்தம் பகுதியில் பழங்குடியினர் உற்பத்தி செய்யும் ராகி, சாமை, வரகு ஆகியவற்றை மதிப்புக் கூட்டுப் பொருளாக்க கிடங்கு மற்றும் பொதுச் செயலாக்க மையம் அமைக்கப்படும்.**
- **தீர்த்தமலையில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்கப்படும்.**
- **இப்போது, இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கும், பாளையம்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், பழுதடைந்த நிலையில் இருக்கும் 4 வகுப்பறைகள், அதன் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.**

இந்த ஏழு அறிவிப்புகளுடன், இன்று காலை எனக்கு வரப்பெற்ற இந்தப் பகுதி மக்களின் கோரிக்கைகளை ஏற்று மொத்தம் 15 அறிவிப்புகள் இன்னும் சிறிது நேரத்தில் வெளியாகிவிடும்.

"மக்களிடம் செல்! மக்களைப் பற்றி அறிந்து கொள்! மக்களுக்காகச் செயல்படு!" இதுதான் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் எங்களுக்குச் சொன்னது! இதுதான், அவர்கள் எங்களுக்கு அமைத்துக் கொடுத்த பாதை! வழிகாட்டு நெறிமுறை! அந்த அடிப்படையில்தான், ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மக்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்! அதன் பலனை மக்கள் எனக்கு எழுதும் கடிதங்கள் மூலமாகவும் - நேரடியாக அவர்களைச் சந்தித்துப் பேசும் பொழுதும் நான் உணர்கிறேன்.

**அண்ணாவும் - கலைஞரும் எங்களுக்கு அமைத்துக் கொடுத்த பாதை!**

எடுத்துக்காட்டாக, உங்களிடம் ஒன்றிரண்டு கடிதங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பூரணி என்பவர், தன்னுடைய வீட்டு வாசல் முன்பு கழிவுநீர் தேங்குவது தொடர்பாக எழுதியிருந்த மனுவுக்கு, 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தில் தீர்வு கண்டோம். அதற்கு நன்றி தெரிவித்து அவர்கள் எழுதிய கடிதத்தில், என்ன சொல்லியிருந்தார்கள் என்றால்,

இதய நோயாளியான அவர்களுக்கு தேவையான மருந்துகள், அரசு மருத்துவமனையிலேயே கிடைத்துவிடுவதாகவும், ஆனால், ஒரே ஒரு மாத்திரையை மட்டும் வெளியே வாங்க வேண்டிய நிலை இருப்பதாகவும் சொல்லியிருந்தார்.

அந்த மாத்திரையின் விலை, ஒரு அட்டை 215 ரூபாய். ஒரு நாளைக்கு இரண்டு மாத்திரை என்று, ஒரு மாதத்திற்கு 60 மாத்திரை சாப்பிடவேண்டும். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் கொடுக்கும் ஆயிரம் ரூபாய் இதற்கு மிகவும் உதவியாக இருப்பதாகவும், கடந்த எட்டு மாதமாக, இந்தத் தொகையில்தான் மருந்து வாங்குவதாகவும்

- அந்தக் கடிதத்தில் அவர்கள் சொல்லியிருந்தார்கள்.

**சொல்லாததையும் செய்வோம்! சொல்லாமலும் செய்வோம்!**

அடுத்து, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஜீனி வேதமுத்து என்பவர் எழுதிய கடிதத்தில், கடந்த இருபது ஆண்டுகளாக செப்பனிடப்படாமல் இருந்த கைலாசபுரம் - செட்டியூரனி சாலையை சீரமைத்துக் கொடுத்ததற்கு நன்றி சொல்லியிருந்தார். "சொன்னதைச் செய்வோம்! செய்வதைத்தான் சொல்வோம்!" என்று தலைவர் கலைஞர் சொன்னார்! இந்த திராவிட மாடல் அரசைப் பொருத்தவரைக்கும் "சொல்லாததையும் செய்வோம்! சொல்லாமலும் செய்வோம்!". பெரிய பெரிய திட்டங்களை, மாவட்டத்திற்குத் தேவையானவற்றைத் திட்டமிட்டுச் செய்து தருகிறோம். பொதுமக்களின் தனிப்பட்ட கோரிக்கைகளையும் கேட்டு, செயல்படுத்திக் கொடுப்பதன் மூலமாக, எல்லோரும் மனநிறைவு அடையும் ஆட்சியாக நம்முடைய கழக அரசு செயல்பட்டு வருகிறது.

**'யாருக்கும் எந்தக் குறையும் இல்லை' எனும் நிலையை உருவாக்குவோம்!**

பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக ஒவ்வொரு வீட்டிற்கும், ஏதாவது ஒரு பயன்கிடைக்க அதில் அவர்கள் பயனடைந்து கொண்டு வருகிறார்கள். அதேபோன்று 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின் மூலமாக 'யாருக்கும் எந்தக் குறையும் இல்லை' என்ற நிலையை உருவாக்க நாங்கள் இப்போது பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இப்படி மக்களுக்காகச் செயல்படுவது எதிர்க்கட்சிகளுக்குப் பொறாமையையும், எரிச்சலையும் ஏற்படுத்துகிறது. அதனால்தான், அவதூறுகள் பொய்ப் பிரச்சாரங்கள் மூலமாக இந்த ஆட்சிக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த நினைக்கிறார்கள்.

**தொடர் தோல்விக்குப் பிறகும் ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை!**

வாக்களித்தவர்கள், வாக்களிக்க மறந்தவர்கள் என்ற எந்த வேறுபாடும் பார்க்காமல் அனைத்து மக்களுக்குமான அரசாக நாம் செயல்பட்டு வருகிறோம்! ஆனால், இதே பெருந்தன்மையை மற்றவர்களிடம் பார்க்க முடியவில்லை! தமிழ்நாட்டில் தொடர் தோல்வி, படுதோல்வி அடைந்த பிறகும் அதிலிருந்து ஒன்றிய அரசு இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை! தமிழ்நாட்டின் முக்கிய கோரிக்கையாக இருக்கும் மெட்ரோ ரயில் போன்ற திட்டங்களுக்கு கூட நிதி ஒதுக்க ஒன்றிய அரசுக்கு மனமில்லை! நல்ல குணமில்லை! பாடம் கற்றுக்கொள்வதற்கு நினைப்பும் இல்லை! தங்களின் பத்து வருட காலத்தில் தமிழ்நாட்டில் எந்த ஒரு பெரிய திட்டமும் செய்யவில்லை.

ஒன்றிய அரசு என்பது, விருப்பு வெறுப்புகளைக் கடந்து, அனைத்து மக்களுக்குமான பொதுவான அரசாக செயல்பட வேண்டும் என்பதை இனியாவது அவர்கள் உணர வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்!

தி.மு.க.வைப் பொருத்தவரைக்கும் நாங்கள் மக்களுடன் இருக்கிறோம். மக்களாகிய நீங்கள் எங்களுடன் இருக்கின்றீர்கள். இதுதான் எங்களுடைய வெற்றியின் ரகசியம்! இதுதான் தமிழ்நாட்டின் வளர்ச்சியின் ரகசியம்! மக்களுக்கு உண்மையாக இருந்து, உண்மையான வளர்ச்சியை உருவாக்குவோம்! இந்தியாவின் முதன்மை மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாட்டை உன்னதமான சிறந்த மாநிலமாக உருவாக்கிக் காட்டுவோம், உருவாக்கிக் காட்டுவோம் என்று உறுதி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## காசா மீது விமானத் தாக்குதல்!

காஸா, ஜூலை 12 –

காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரபடுத்தி உள்ளது. காஸாவில் உள்ள டெய்ர் அல் பலா அகதிகள் முகாம் அருகே உள்ள வீடுகளின் மீது நேற்று காலையில் இஸ்ரேல் விமான தாக்குதல் நடத்தியதில் 5 சிறுவர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். அதை தொடர்ந்து டெய்ர் அல் பலாவின் இன்னொரு பகுதியில் இஸ்ரேல் விமான படை தாக்குதலில் ஒரு சிறுவன் உட்பட 8 பேர் பலியானார்கள்.



நேற்று (11.07.2024) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தமிழ்நாட்டில் தொன்மையான தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தலுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், தேவாலய நிர்வாகிகளிடம் காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் சி.விஜயராஜ்குமார், சிறுபான்மை நல இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம், ஆகியோர் உடனிருந்தனர்.